2009 ஜூலை 2]

மீண்டும் இயக்குவதற்கு ஏதாவது புதிய திட்டத்தை உருவாக்கி, அந்த நூற்பாலைகளையெல்லாம் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசாங்கத்தின் பொறுப்பிலே 5 நூற்பாலைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றை நவீனமயமாக்கினால்தான் இலாபம் இருக்கும் என்ற உணர்வோடு சுமார் 61 கோடி ரூபாய்க்கு அதற்கு ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம்.

இப்போது இயங்காமல் இருக்கின்ற 5 நூற்பாலைகளில் 'பி' யூனிட்டில் நன்றாக இருக்கிற மெஷின் பகுதிகளை மட்டும் ஓட்டலாம் என்று முடிவு செய்து, அதற்கு ரூ.18 கோடியில் அரசு ஒரு திட்டம் தீட்டியிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

78—

சுரங்கப்பாதை

***9618—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரில் காமராஜ் சாலையில் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே ஒரு சுரங்கப்பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 2

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் நகரில் காமராஜ் சாலையில் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் சுரங்கப்பாதை அமைக்க, சி.ஆர்.ஐ.டி.பி. திட்டத்தின்கீழ், 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் மதிப்பில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணியினைத் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரில் உள்ள காமராஜர் வீதியில் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே இரண்டு மேல்நிலைப் பள்ளிகள், காவல் நிலையம், பத்திரப் பதிவு அலுவலகம், நீதிமன்றம், தனியார்களின் பல்வேறு கடைகள் உள்ளன. இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அந்த இடத்தில் ஒரு சுரங்கப்பாதை அமைக்க வேண்டி ஓராண்டுக்கு முன்பு கோரிக்கை வைத்தேன். தற்போது அந்தக் கோரிக்கையினை நிறைவேற்ற வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் ஒரு பாலத்தை... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன என்றுதானே சொல்கின்றார். அதற்கு இன்னும் என்ன பதில் வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், அந்த இடத்திலே ஒரு சுரங்கப்பாதை வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்த இடத்தில் உள்ள போக்குவரத்து நெரிசலை அறிந்து, இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அந்த இடத்தில் அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கின்ற காரணத்தினால் அப்பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் சாலையினைக் கடந்து செல்லும் அப்பகுதியில் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்ற காரணத்தினால்தான், அந்த இடத்தில் ஒரு சுரங்கப்பாதை அமைப்பதற்காக மாண்புமிகு

2009 ஜூலை 2]

முதல்வர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். மேலும், தற்போது சுரங்கப்பாதை அமைந்துகொண்டிருக்கும் இடத்திலிருந்து இன்னும் ஒரு கி.மீ. தூரத்தில் ஒரு சுரங்கப் பாதை வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி, துறை அலுவலர்களுடன் கலந்து ஆய்வு செய்து அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு சுரங்கப்பாதைகளையும் அமைக்க நடவடிக்கை எடுத்த.. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி என்று சொல்லி முடியுங்கள் அம்மா.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி நகரத்தினுடைய மையப் பகுதியிலே மாநில நெடுஞ்சாலை செல்கிறது. அந்தச் சாலையிலே வாகனப் போக்குவரத்து என்பது அதிகமாக இருக்கின்றது. இதனால், பொதுமக்கள் அந்தச் சாலையினுடைய ஒரு பகுதியிலிருந்து மறு பக்கத்திற்குச் செல்வது என்பது மிகக் கடினமாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மையப் பகுதியில் ஒரு சுரங்கப்பாதை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி ஒன்று எழுப்பினால் அதற்குரிய பதிலைத் தர ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2009 ஜூலை 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி.

திரு. எஸ். மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் - தாராபுரம் சாலையில் பல நேரங்களில் போக்குவரத்து தடைபடுகிறது. அங்குள்ள அரசு மருத்துவமனைக்கு அவசர சிகிச்சைக்காக வருகின்றவர்கள், இதனால் அவதிப்படுகின்றார்கள். அதனைக் கருத்தில்கொண்டு, அவ்விடத்தில் 4 வழிப் பாதை அல்லது 6 வழிப் பாதை அமைக்க திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞருடைய அரசு ஏற்பட்ட பிறகு, திருப்பூரில் உள்ள போக்குவரத்து நெரிசலை அறிந்துதான் சுமார் 70 கோடி ரூபாய்க்கு அனுமதி தந்து, அங்கு இருக்கக்கூடிய ஆரச் சாலைகள், வட்டச் சாலைகள் எல்லாம் அகலப்படுத்தப்பட்டிருக்கின்றன. பாலங்கள் எல்லாம் அகலப்படுத்தப்படும் பணிகள்கூட நடந்துகொண்டு வருகின்றன. பெரும்பாலான சாலைப் பணிகள் முடிவுற்று இருக்கின்றன. மேலும் திருப்பூர்-தாராபுரம் பகுதியை இணைக்கக்கூடிய சாலை, போக்குவரத்து அதிகம் உள்ள சாலைதான் என்பதை நான் அறிவேன். எனவே, அச்சாலையை 4 வழிச் சாலையாக அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன்.

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் மற்றும் நோயாளிகள் நலன் கருதி, வேலூர் நகரில் அமைந்துள்ள சி.எம்.சி. மருத்துவமனை அருகே ஒரு சுரங்கப்பாதை அமைக்க நடப்பு நிதியாண்டிலேயே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு .பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2009 ஜூலை 2]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சுரங்கப் பாதையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் என்னிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். வருகின்ற 9 ஆம் தேதி நெடுஞ்சாலை மானியக் கோரிக்கை வரவிருக்கின்றது. எனவே, அதற்குப் பிறகு, இதுபற்றித் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

79—

பாதுகாப்பு மிதவைகள்

***19466—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாகப் பாதுகாப்பு மிதவைகளை மானிய விலையில் மீனவர்களுக்கு வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலமாக மீனவர்களுக்கு மானிய விலையில் மிதவைகள் வழங்கும் திட்டம் தற்போது செயல்படுத்தப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாவது